
www.tamilarangam.net

# கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தை கோரி...

புலம் பெயர்ந்த இலக்கியம் என்பது எவ்வளவுக்கு எவ்வளவு கீழ்நிலைப் பாத்திரத்தை அடைகின்றதோ அந்தளவுக்கு மனித நடத்தைகளும் கேவலமாகின்றன. இலக்கியம் பேசுவதாக காட்டிக் கொள்ளும் இரண்டுநபர்கள் சந்திக்கும் போது அவர்கள் இலக்கியம் பேசுவதற்க்கு எதுவுமற்றவராகி விட்டதால், இலக்கியம் பேசுவதாக பாசங்கு செய்வோர் பற்றி தனிப்பட்ட விவாகரத்தை ஊதி, பெருக்கி, வால் மூக்கு வைத்து கதைகட்டுவது, பகிடியாக கதைகளை உலாவவிடுவது, எழுத்தை திரிப்பது, இல்லாதைப் பொல்லதை ஊதிப் பெருக்குவது என நகரிகமற்ற பண்பாடற்ற வகையில் கீழ்நிலைப் பாத்திரத்தை இன்று புலம்பெயர் இலக்கியம் சிராழிந்து செல்கின்றது.



வ ன் மு றை

இந்தப் போக்கில் சில நம்பிக்கைகளுடன் பரிசில் சில கருத்துகளை பரிமாற கூடிய கூட்டத்தில் உடல் வன்முறை அரங்கேறியது. இந்தளவு காலமும் ஜனநாயக மறுப்பை காட்டி தம்மை முற்போக்காக காட்டினர்களோ அதை எந்த வெட்கமும் இன்றி அரங்கேற்றினர். இதில் ஒருவர் வன்முறையை உடல் ரீதியில் தொடங்க முயற்சித்ததும், அதன் தொடர்ச்சியில் 5,6 நபர்கள் தொடர்ச்சியன வன்முறைக்கு அழைப்பு விட்டதுடன், அதை நியாப்படுத்திதுடன் அதை ஓட்டிய வார்த்தைப் பிரயோகங்கள் உருண்டு ஓடின. இந்த இடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் பெண்ணை இழிவுபடுத்தும் தூசணத்தால் தமது ஆணாதிக்கத்தை வெளிப்படுத்தியும், அதை பெண்கள் கூட மறைமுகமாக நியாப்படுத்த மௌனம் சாதித்த நிலையில், ஜனநாயக வேஷசங்கள் தனிநபர் கோசமானது. இந்த வன்முறையைத் தொடர்ந்து பிரான்சுக்கு வெளியில் வாழும் புலம் பெயர் பிரிவுகள் வன்முறையை நியாப்படுத்தியும் வாக்களத்து வாங்கியும் வன்முறையின் கதாநாயகர் ஆகின்றனர். மறுபுறம் இதற்கு எதிரான அனைத்து இலக்கிய சீரழிவுக்கும் மறுதரப்பு கம்பளம் விரிக்கின்றது. இந்ததளத்தில் ஜனநாயகத்தின் குரல்கள் மௌனித்துப் போயுள்ளது.

ஆம் புலிகள் பற்றி அவர்களது ஜனநாயக மீறல்கள் பற்றி வாய்க்கு வாய் கிழிய பேசும் இவர்கள்தான், தமது அதிகாரம் இழந்த போது மௌனமானதும், முடியாத நிலையில் அவை பல தளத்தில் பீறிட்டு வெளிக்கிளம்பியது. இந்த வன்முறை நிகழ்வின் போது வன்முறைக்கு எதிராக குரல் கொடுத்து விமர்சிப்பதற்க்குப் பதில், எதிர் வன்முறையை இரு எதிர் கன்னையிலும் தொடர்ச்சியாக தூபம் இட்டு வளர்த்த போக்கில், புலம் பெயர் இலக்கிய ஜனநாயகம் செத்துதான் போனது. ஜனநாயகம் பற்றி நம்பிச் சென்றோர் வன்முறைக்கு முன் மௌனம் சாதிக்கவே நிர்ப்பந்தித்தது. அந்தளவுக்கு வன்முறையின் வார்த்தையும், பெண்ணின் மீதான ஆணாதிக்க இழிவாடல் மொழிகளும் கோராத்தை வெளிப்படுத்தின.

ஜனநாயகத்தை கொஞ்சம் தன்னும் காப்பாற்றியோர் இதை தவறு எனக் குறிப்பிட்ட நிலையில் வன்முறைகான சுயவிமர்சனத்தை பொதுவில் கோரிய போதும், சிலர் குறித்துக் கோரிய போதும், சுயவிமர்சனத்தை செய்து பின் நியாப்படுத்துவது, கேட்க மறுப்பது, அவை தமக்கு இல்லை என்ற மாதிரி ஜனநாயக வேடம் போட்டு வெளி நடப்பு செய்வது என கூட்டம் வன்முறையை நியாப்படுத்துவதில் அனைத்து வழியையும் கையாண்டது. இதைத் தொடர்ந்து புலம் பெயர் நாடுகளுக்கு இதை நியாப்படுத்தியதன் தொடர்ச்சியில் அங்கிருந்தும் வன்முறைக்கான ஆதரவுகள் அதிகாரத்தின் வடிவத்தில் இருந்து நியாப்படுத்தப்படுகின்றது.

வன்முறையின் தொடக்கம், அதன் தொடர்ச்சியில் அதில் கன்னை பிரிந்தும் பிரியமலும் ஈடுபட்ட அனைவரும் வன்முறையின் பிரதிநிதிகள்தான். அத்துடன் இதில் சம்மந்தப்படாது வெளியில் இருந்து இதை நியாப்படுத்தியவர்களும் வன்முறையின் பிரதிநிதிகள்தான். வன்முறை எதிர்ப்பாளர்கள் அந்த இடத்தில் இதை தடுப்பவர்களாகவும், மௌனமாக தமது கோபத்தை வெளிப்படுத்தியவர்களாகவும் இருந்து விமர்சித்தனர்.

இந்த வன்முறை முன்கூட்டியே வளர்ச்சி பெற்றதால் அதன் தொடர்ச்சியையும் ஆராய வேண்டியுள்ளது. ஏனெனின் இது திடீர் என நிகழ்ந்தவையல்ல. மாறக முன் கூட்டியே இதன் வடிவங்கள் படிப்படியாக அரசியல் சீரழிவால் மாற்றம் கண்டுவந்தன.

இந்த நிகழ்வையிட்டு சிலர் அதிர்ந்து போகவில்லை. மாறாக இதை அதன் அரசியல், கலை தளத்தில் எதிர் பார்த்தவர்கள்தான். ஆனால் முதன்முதலாக கூட்டத்தில் கலந்து கொண்டவர் முதல் நீண்ட உப்புச் சப்பற்ற பல கலந்துரையடால்களை கண்டவர்கள் வரை பலர் அதிர்ந்து போயுள்ளனர். இனிமேல் மாற்று நடைமுறைக்கு இவைதான் தீர்வு என்ற அளவுக்கு புலம் பெயர் இலக்கியவான்களின் ஜனநாயக இலக்கிய நடத்தைகள் எமக்குமுன் விரிகின்றன. அத்துடன் மாற்றுக் கருத்துக்கு, கருத்து முரண்பாட்டுக்கு இதுதான் பதில் என்ற தொடர் விளக்கத்தை அவர்களும், அவர்களின் தொங்குகளும் பிரகடனம் செய்து பிரச்சாரத்தை முன்தள்ளுகின்றனர்.

இந்த வன்முறை என்பது தீடிரென எழுந்தவையல்ல. இதற்க்காக புலம் பெயர் இலக்கிய மூலத்தை ஆய்வு செய்வது அவசியமாகின்றது. இந்தவகையில் இரு போக்குகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

1.இலக்கியத்தின் நிலை
2.தனிநபர்களின் பாத்திரங்கள்

ஒடுக்கப்பட்ட அதாவது இனரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும், புலம் பெயர் நாட்டில் நிற ரீதியாகவும், உழைப்பு ரீதியாகவும், கலாச்சாரப் பண்பாட்டுப் பிரிவாலும் இன்னமும் வேறு ஒடுக்குமுறைகளுடனும் (சாதி, பெண்...) புலம் பெயர்ந்த சமூகம் ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்து எழுந்து போராடவேண்டிய வரலாற்றுக் கடமையை அன்று தொடங்கி படிப்படியாக இன்று குழிதோண்டி புதைத்தபோது வன்முறையும் அதன் குணாம்சம் ஆகின்றது. மக்கள், மக்களின் துயரங்கள் மலையாளவானது. எல்லையற்றவை. ஆனால் தனிமனித வக்கிரத்தில் இருந்து ஆங்கங்கே கொட்டிவிடும் படைப்புகளை தனதாக்கி மக்கள் இலக்கியத்தை துலைத்து நீண்டநாட்கள் ஆகிவிட்டன. மக்களின் தளத்தில் இருந்து சொந்தக் கருத்தை எழுத்தில் வைக்கமுடியாத அவலம். சொந்த நாட்டைப் பற்றியோ, புலம் பெயர் நாட்டைப் பற்றியோ, புலம் பெயர் தமிழர்களைப் பற்றியோ எந்தவிதமான அக்கறையின்மை வன்முறையின் தளமாகின்றது.. அதில் இருந்து சமூகத்தை பார்ப்பதும் கிடையாது. மனித அவலங்கள் எல்லையில்லாத பரிணாமத்தில் விரிந்துள்ள நிலையில் இந்த இலக்கிய உலகம் கண்மூடி பால் குடிக்கும் பூனையானது. சிலர் எதாவது தெரிந்து கொள்ளலாம் என்ற முயற்சிகள் (கருத்தரங்குகள், கூட்டங்கள்....)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்முறை மூலம் பந்தாடப்படுகின்றது அல்லது அவதூறுகள் மூலம் முடிவுக்கு கொண்டுவரப்படுகின்றது.. அதே பழைய இயக்க அரசியல். இதில் எந்த விதமான சுயவிமர்சனமும் கிடையாது. இந்த விமர்சனங்கள் என்பது கடந்தகால இயக்கத்தை அரசியல் ரீதியில் விமர்சிக்க முனையவேண்டும். இருக்கவேண்டும். இந்த வன்முறையில் ஈடுபட்டோர் கடந்த கால தமது அரசியல் அமைப்பையோ, தமது அரசியல் ரீதியான ஜனநாயக விளக்கத்தையோ என்றும் பகிரங்கமாக வைத்தில்லை. மாறாக தம்மை காட்டிக் கொள்ள சில கோசங்கள் அதன் மீதான கேள்விக்கு பதிலற்ற பூச்சாண்டிக்காட்டுவது என்று புலம் பெயர் அரசியல் மாற்றுகள் நாறிய போது, இதுவும் அம்பலப்பட வன்முறை அரங்கேறுகின்றது. இந்த வன்முறை தொடக்கியவரில் இருந்து அதில் கன்னை பிரிந்து அணிதிரண்டு வன்முறையை செய்ய தயரான அனைவருமே வன்முறையின் பிரதிநிதிகள்தான். இவர்கள் அனைவரையும் பொதுவில் கண்டிக்க மறுப்பவர்கள் அனைவரும் வன்முறையின் மறைமுகமான ஊக்கிகள்தான்.

இங்கு யார் முதல் தொடங்கியது என்பதோ, கன்னை பிரிந்து வன்முறையை நியாப்படுத்தியதோ, பெண்ணை இழிவு படுத்தும் துசாணத்தால் வீரம் பேசியதோ, வன்முறையில் ஈடுபட தயராக அறை கூவல் இட்டோர் என்பதில் யார் குற்றவாளி என்பது இரண்டாம் பட்சமானது. மாறாக வன்முறையை அரசியல் ரீதியில் விமர்சிக்க தவறி ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கவும் பின்னால் அவர்களுடன் சேர்ந்து வக்காளத்து வாங்கும் அனைவரும் கடும் விமர்சனத்துக்குரியவர்கள். இதை எல்லைப்படுத்துவது, விளக்கம் அளிப்பது என அனைத்தும் மிக கேவலமானது. ஒரு வன்முறையின் போது தற்காப்பு நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர் எடுக்கமுடியும். ஏனெனின் முகம் தெரிந்த கடந்தகால இலக்கிய நண்பர்களாக திரிந்தவர்கள், அரசியல் ரீதியில் தம்மை ஒரே நிலையில் இனம் காட்டுபவர்கள், கன்னை பிரிந்து வன்முறையில் ஈடுபடுவதும், வன்முறைக்கு கூவி அழைப்பதும் ஜனநாயகத்துக்கு எதிரானது. இனம் தெரியாத நபர்கள் இங்கு திடீரென தாக்கும் போது இதன் தற்பரியம் வேறுபட்டவைதான்.

கருத்துச் சுதந்திரத்தின் எல்லை என்பது கருத்தை சுதந்திரமாக சந்திக்கும் வரைதான் உயிர் வாழ்கின்றது. இது மறுக்கப்படும் எல்லா நிலையிலும் அவை தனிமனித பயங்கரவாதமாகின்றது. இது போல் கருத்தை பகிரங்கமாக வைக்காத அனைத்து நடவடிக்கையும் ஜனநாயகத்துக்கு எதிரானவைதான். இதுபோல் இல்லாதையும், திரித்து எழுதுவதும் ஜனநாயகம் அல்ல. வடிவத்தில் இவை வேறுபட்டாலும் பொதுவில் இவைகளின் அரசியல் வேறுபடுவதில்லை. இதில் தனிமனித பாத்திரங்கள் தீர்க்கமாக வன்முறையில் செயல்படுகின்றன.

வன்முறையை தொடங்கியதும், அதை தொடர்ந்ததும், நியாப்படுத்தியதுடன் நிகழ்வை தொடர்ச்சியில் கூட்டத்தை வன்முறைக்குள் இட்டுச் செல்ல தொடர்ச்சியான முயற்சிகளை நகயாண்டனர். மீண்டும் கூட்டத்தை தொடங்கிய போது வன்முறையை தொடரும் ஆவல், அதன் உச்சத்தனம், வன்முறை சாத்தியமில்லை என்றால் பகிஸ்கரிப்பும், கலந்து கொண்டாலும் வன்முறைக்கு தயார் என்று கூறி நிற்பதும் என்று தொடர் நிகழ்ச்சிகளை அரசியல் ரீதியில் விமர்சிக்க தவறி கூட்டம் கலைந்தது. வன்முறையயை கடைப்பிடிக்க தயரான அனைவரும் வன்முறையை நியாயப்படுத்திய படியேதான் வெளியேறினர். மொழியல் வன்முறை, மொழியில் ஆணாதிக்கம் என்ற உச்சரிக்காத புலம் பெயர் இலக்கியம், மற்றும் நபர்கள் இன்று இல்லை. ஆனால் பெண்கள் குறித்த தூசணப் பயன்படும் ஆணாதிக்கத்தின் கோர முகத்தை அன்று காட்டியது. மிககேவலமான சொற் பிரயோகங்களால் ஆண்களை பெண்ணின் நிலைக்கு 'தாழ்த்தி' பெண்ணுக்கு ஒப்ப ஆணை இழிவுபடுத்திய போது, அதாவது பெண்ணையும் முரண்பட்ட ஆணையும் ஒரே நிலைக்கு கொண்டுவந்து இழிவுபடுத்தியது, ஆணாதிக்கத்தின் உச்ச கொப்பளிப்பாக இருந்தது. பெண்களை ஆணாதிக்கம் கொண்டு தாக்கும் போதும், திட்டும் போதும் இந்த தூசணம் தான் அதன் பொதுமொழியாகின்றது. இந்த மொழிப் பிரயோகம் தொடங்கியவரில் இருந்து பலர் பயன்படுத்தினர். இது கண்டனத்தை எந்த சந்தர்ப்பத்திலும் கோரவில்லை.


இன்று இதற்கு மாற்றாக தூசனங்களை இலக்கியமாக்கும் முயற்சிகளின் தனிமனித வக்கிரத்தை கொட்டுவது அதிகரித்துள்ளது. எந்தளவுக்கு எந்தளவு அரசியல் அற்ற தனிமனித வக்கிரத்தை தனது தளத்திலும், பிற தளத்திலும் கையாள்கின்றனரோ அந்தளவுக்கு தனிமனித வன்முறை அரசியல் கோரமுகம் எடுக்கின்றது. சமூகத்தின் மொழி, சமூகத்தின் போராட்டம், சமூகத்தின் இலக்கியம்... என்ற பார்வை மறுத்த இலக்கியங்கள், செயல்கள்... அனைத்து தனிமனித வன்முறையின் மூலம் ஆகின்றது. மக்களை மாற்ற மொழி, இலக்கியம், செயல்.... கோராத வரை வன்முறை தீர்வாகின்றது. அதுவே அரசியல் ஆகிப் போவது புலம் பெயர் இலக்கிமாகின்றது. இது தனது சொந்த சீரழிவால் முடிவுக்கு இட்டுச் செல்கின்து.

இந்த வன்முறையின் பின்னணியில் நாம் அடையாளம் காணும் முக்கியமான விடயங்கள்-

1.ஓட்டு மொத்த வன்முறையும், அதில் ஈடுபட்ட அனைவரும் விமர்சனத்துக்குரியவர்கள். இதை கண்டிக்க மறுப்பவர்களும் கண்டனத்துக்குரியவர்கள்.!

2.பெண்களை இழிவுடுத்தி அடக்கும் ஆணாதிக்க தூசாணப் பயன்பாடு பெண்ணியல் கண்ணோட்டத்திலும், மொழியல் கண்ணோட்டத்திலும் கடும் விமர்சனத்துக்குரியவை!

3.இந்த வன்முறைக்கு தூபமிட்ட அனைத்து இலக்கியமற்ற நடத்தைகள் மூலம், முதுகுக்கு பின் செய்யும் பிரச்சாரம், அழுக்குகள் செயல்கள் எல்லாம் கண்டனத்துக்குரியவை!



4.இலக்கியம் என்று எதுவுமற்ற, அரசியல் அற்ற போக்கின் வளர்ச்சி வன்முறை ஊற்று மூலமாக இருப்பதால் அவையும் கண்டனத்துக்குரியவை!

5.இதில் சம்பந்தப்படாத நபர்கள் வன்முறையை நியாப்படுத்தியும், மறு தளத்தில் இலக்கியமற்ற செயல்களும், ஜனநாயகத்தை புதைக்க ஈடுபடுபவர்களும் விமர்சத்துக்குரியவர்கள்.!

இந்த வகையில் இக் கண்டனம் மிகமுக்கியத்துவம் வாய்ந்தன. மீண்டும் வரலாறு ஜனநாயகத்தினை கோரிய போதே இத்துண்டுப்பிரசுரம். அனைத்து வன்முறையையும் கண்டிக்கவும், அதையொட்டி சிந்திக்கவும் எம்மை நிர்பந்திக்கின்றது.

மணிவண்ணன் - கிளி - தில்லை - ரயா - விஜியன், பாரிஸ் 12.10.1999

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்